# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol : 01 | Issue : 236 | 4 Pages | 29.3.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 236 | 4 பக்கங்கள் | 29.3.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## கப்பல் விபத்து : பெரும் உயிர்ச்சேதம் தவிர்த்த இந்திய குழுவினருக்கு ஜோ பைடன் பாராட்டு



அமெரிக்கா, மார்ச். 29

அமெரிக்காவின் மேரிலேண்ட் மாகாணத்தில் படாப்ஸ்கோ நதியின் குறுக்கே உள்ள பிரான்சிஸ் ஸ்காட் கீ பாலத்தின் மீது நேற்று அதிகாலை சரக்கு கப்பல் ஒன்று பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் பாலம் உடைந்து தண்ணீரில் விழுந்தது. விபத்து நடந்த சமயத்தில் பாலத்தின் மீது சென்ற வாகனங்கள், பாலம் சீரமைப்பு பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் உள்ளிட்டோர் நீரில் மூழ்கினர்.

இந்தவிபத்தில் 6 பேர் நீரில் மூழ்கியதாக கூறப்படுகிறது. அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.நீரில் மூழ்கிய 6 பேரும் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும், பாலத்தின் மீது மோதிய கப்பல் சிங்கப்பூர் நாட்டை சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு சொந்தமானது. சரக்கு கப்பலில் 22 இந்திய மாலுமிகள் பணியாற்றினர். சரக்கு கப்பல் பாலத்தின் மீது மோத உள்ளது குறித்து கப்பல் மாலுமிகள் முன்னதாக தகவல் தெரிவித்ததால் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டது.மேலும் பெரிய அளவிலான உயிர் சேதம் தவிர்க்கப்பட்டு உள்ளது.

அந்த கப்பலில் 4 ஆயிரத்து 679 கண்டெய்னர்கள் இருந்து உள்ளது. இலங்கையை நோக்கி அந்த கப்பல் சென்று கொண்டு இருந்த நிலையில் கட்டுப்பாட்டை இழந்து பாலத்தில் மோதி இந்த விபத்து ஏற்பட்டு உள்ளது.

இந்த விபத்திற்கு இந்திய தூதரகம் இரங்கல் தெரிவித்து உள்ளது. இந்த விபத்தால் பாதிக்கப்பட்ட இந்தியர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக உள்ளதாக இந்திய தூதரகம் உதவி எண்களை அறிவித்து உள்ளது.


இது குறித்து அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கூறியதாவது :

கப்பல் கட்டுப்பாட்டை இழந்தது குறித்து போக்குவரத்து ஊழியர்களுக்கு கப்பல் பணியாளர்கள் முன்னரே எச்சரித்தனர். இதன் மூலம் பால்டிமோர் பாலத்தில் போக்குவரத்து மூடப்பட்டு பெரும் உயிர்ச்சேதம் ஏற்படாமல் தவிர்க்கப்பட்டு உள்ளது.

போக்குவரத்து அதிகாரிகளுக்கு கப்பலில் பணியாற்றிய இந்தியகுழுவினர் உடனடியாக தகவல் தெரிவித்து உதவியதால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டு உள்ளது. பல உயிர்கள்காப்பாற்றப்பட்டு உள்ளது. எனவே கப்பலில் பணியாற்றிய இந்திய குழுவினருக்கு எங்களது பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறோம்.

இவ்வாறு ஜோபைடன் கூறி உள்ளார்.

## மாஸ்கோ தாக்குதல் பின்னணியில் அமெரிக்கா, இங்கிலாந்து, உக்ரைன்: ரஷியா புதிய குற்றச்சாட்டு



ரஷ்யா, மார்ச். 29


ரஷியாவின் தலைநகர் மாஸ்கோவில் நடந்த இசை நிகழ்ச்சியில் பங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு தாக்குதலில் 139 பேர் பலியானார்கள். இந்த தாக்குதலுக்கு ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் பொறுப்பேற்றது. இதற்கிடையே இத்தாக்குதலில் உக்ரைனுக்கு தொடர்பு இருப்பதாக ரஷிய அதிபர் புதின் குற்றம் சாட்டினார். அதை உக்ரைன் திட்டவட்டமாக மறுத்தது.

இந்த நிலையில் மாஸ்கோவில் நடத்தப்பட்ட தாக்குதல் பின்னணியில் உக்ரைன், அமெரிக்கா, இங்கிலாந்து இருப்பதாக ரஷியாவின் உளவுத் துறை தலைவர் அலெக்சாண்டர் போர்ட்னிகோவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்கூறும்போது, "மாஸ்கோவில் நடந்த தாக்குதலின் பின்னணியில் அமெரிக்கா, இங்கிலாந்து, உக்ரைன் நாடுகள் இருக்கின்றன. எங்களிடம் உள்ள உண்மை தகவலின் அடிப்படையில் இதை தெரிவிக்கிறோம்.

இந்த நாடுகள் ஏற்கனவே கடந்த காலங்களில் ரஷியாவிடம் இதுபோன்ற தாக்குதல்களை நடத்தியுள்ளன. மேற்கத்திய நாடுகளும், உக்ரைனும் ரஷியாவில் அதிக பரதிப்பை ஏற்படுத்த விரும்புகின்றன" என்றார்.

## பிஜி தீவில் சக்திவாய்ந்த நில நடுக்கம்



தென் பசுபிக், மார்ச். 29

தென் பசிபிக் கடலில் உள்ள பிஜி தீவு அருகே சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. தலைநகர் சுவா பகுதியில் இன்று காலை ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக நிலநடுக்கம் உண்டானது. சுவாவில் இருந்து 591 கி.மீ. தென்மேற்கு பகுதியில் 10 மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கும் மையம் கொண்டதாக நில அதிர்வுக்கான தேசியமையம் தெரிவித்துள்ளது.

பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்ட போதிலும் சுனாமி எச்சரிக்கை விடப்படவில்லை. நிலநடுக்கத்தை உணர்ந்ததும் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடிவந்தனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை.

# தி.மு.க.வுக்கு 50க்கும் மேற்பட்ட சங்கங்கள் ஆதரவு: முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து தெரிவித்தனர்

சென்னை, மார்ச். 29

பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு பல்வேறு அமைப்புகளும், சங்கங்களும் ஆதரவு தெரிவித்து வருகின்றன.

இன்று (வியாழக்கிழமை) முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து 50க்கும் மேற்பட்ட அமைப்பினர், சங்கத்தினர் தங்களது ஆதரவை தி.மு.க. கூட்டணிக்கு தெரிவித்தனர்.

திராவிடர் கழக தலைவர் வீரமணி, தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் வேல்முருகன் ஆகியோர் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து வருகிறார்கள்.

எம்.ஜி.ஆர்.கழகதலைவர் ஆர். எம்.வீரப்பன், புதிய திராவிட கழக தலைவர் ராஜ் கவுண்டர், சமூகநீதி மக்கள் கட்சி மாவீரன் பொல்லான், பேரவை தலைவர் வடிவேல் ராமன், தென்னக அருந்ததியர் மக்கள் முன்னேற்ற கூட்டமைப்பின் மாநில தலைவர் செங்குட்டுவன், கோவில் பூசாரி நல சங்க தலைவர் வாசு, தமிழக விவசாயிகள் வாழ்வாதார முன்னேற்ற சங்க தலைவர் பரிமளம்.

தென்னிந்திய விஸ்வ கர்மா முன்னேற்ற சங்கத்தின் நிறுவன தலைவர் சரவணன், தமிழக வீர சேவை முன்னேற்ற பேரவை, தலைவர் தங்க தமிழ் செல்வன், தமிழ்நாடு தியாகராஜ பாகவதர் எம்.



கே.டி. பேரவை மாநிலத் தலைவர் கவிஞர் ரவி பாரதி, எஸ்.ஆர்.எம். மாநில பொதுச்செயலாளர் பாலசுப்பிரமணியன், சமூகநீதிக் கட்சி சார்பில், மாநில பொதுச்செயலாளர் வெள்ளமடை நாகராசன் ஆகியோர் நேரில் சந்தித்து இந்தியா கூட்டணிக்கு நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் ஆதரவு அளிப்பதாகவும், இந்தியா கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்கள் வெற்றி பெற ஆதரவு அளிப்பதோடு, தி.மு.க. கூட்டணி வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.

மேலும் பூலித்தேவன் மக்கள் கழகத்தின் தலைவர் எஸ்.பெருமாள் சாமி ஆதரவு தெரிவித்துள்ளார். இவர்களை தவிர 16 விவசாய சங்கத்தினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## வீடு தோறும் கருப்புக்கொடி ஏந்தி தேர்தலை எதிர்த்துப் போராடும் கிராமம்

திருவண்ணாமலை, மார்ச். 29

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அடுத்த செங்குணம் கொள்ளை மேடு பகுதியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன.

சுமார் ஐந்து தலைமுறைகளுக்கு மேல் வசித்து வரும் பழமை வாய்ந்த கிராமம் ஆகும்.

போளூர் அடுத்த செங்குணம் கொள்ளை மேடு கிராமத்தில் சுமார் 700 க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் உள்ளனர் இந்நிலையில் சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் கடந்த நிலையிலும் சுமார் நான்கு,ஐந்து கிலோமீட்டர்கடந்து அருகில் உள்ள செங்குணம் கிராமத்திற்கு நடந்து சென்று வாக்களிக்க வேண்டிய சூழல் உள்ளதாகவும் மேலும் முதியோர்கள், கர்ப்பிணிகள், உடல்நிலை சரியில்லாமல் உள்ளவர்கள் உள்ளிட்டோர் 4,5



கிலோ மீட்டர் நடந்து சென்று வாக்களிக்க சிரமமாக உள்ளது எனவும்நாங்கள்பலமுறைமாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கூறி தங்கள் கிராமத்திற்கு இம்முறை வாக்குச்சாவடி மையம் அமைக்காவிட்டால் தங்கள் ஒட்டுமொத்த கிராமமே அதாவது 700 வாக்காளர்கள் கொண்ட அனைவருமே வாக்களிக்க போவதில்லை என கூறி எதிர்ப்பு தெரிவித்து வீடுகள் தோறும் கருப்புக்கொடி ஏற்றி சுமார் நான்கு நாட்களாக போராட்டம் செய்து வருகின்றனர்.

மேலும் தமிழக அரசே நாங்கள் உங்கள் அடிமைகள் அல்ல உள்ளிட்ட பல்வேறு வாசகப் பதாகைகளை எழுதிவைத்து கிராமமே போராட்டத்தில் ஈடுபட்டு வருவது இப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

எங்கள் பகுதியில் வாக்குச்சாவடி மையம் அமைக்கும் வரை நாங்கள் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என கிராம மக்கள் கூறி வருவது குறிப்பிடத்தக்கது.

## தார்சாலை அமைக்காததை கண்டித்து கருப்பு கொடி ஏந்தி கிராம மக்கள் தேர்தல் புறக்கணிப்பு போராட்டம்



கிருஷ்ணகிரி: மார்ச். 29

கிருஷ்ணகிரி அடுத்த கம்மம் பள்ளி ஊராட்சிக்கு உட்பட்டது பழையவூர் கிராமம். இப்பகுதியில், 150 குடும்பங்களை சேர்ந்த, 700க்கும் மேற்பட்டோர் உள்ளனர். இவர்கள், ஒண்டியூர் சாலை முதல், பழையவூர் வரை தார்சாலை அமைக்க கடந்த, 30 ஆண்டுகளாக கோரிக்கை வைத்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த, 2015ம் ஆண்டு ஒன்றரை கிலோ மீட்டர் அளவிற்கு தார் சாலை அமைக்க, 29 லட்சம் ரூபாய் ஒதுக்கி சாலைகள் போடப்பட்டது. அப்போது, 200 மீட்டர் தூரத்திற்கு சாலை போடவிடாமல் அப்பகுதியில் சிலர் ஆக்கிரமித்ததாக புகார் எழுந்தது.

இது தொடர்பாக போலீசிலும், மாவட்ட கலெக்டர் அலுவலகம் உள்பட பல இடங்களில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கூறிய அந்த பகுதி மக்கள் தேர்த லை புறக்கணிக்க போவதாக நேற்று தெரிவித்தனர். இது குறித்து கிராம மக்கள் கூறியதாவது:

எங்கள் பகுதி பூஸ்தி ரோட்டில், தார்சாலை அமைக்க அரசு அதிகாரிகள்நட்டகல்லை, ஆக்கிரமிப்பாளர்கள் பிடுங்கிவிட்டனர். எங்கள் ஊருக்கு செல்லும் ஒரே பாதையை ஆக்கிரமித்து உள்ளனர். பால் வண்டி, பஸ் வாகனங்களை ஊருக்குள் விடாமல் ஆக்கிரமிப்பாளர்கள் தடுக்கின்றனர்.

இது குறித்து புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் எங்கள் கிராமத்தில் உள்ள, 500 வாக்காளர்களும் வருகிற நாடாளுமன்ற தேர்தலை புறக்கணிக்க முடிவு செய்துள்ளோம். அதிகாரிகள் தலையிட்டு பிரச்னைக்குரிய இடத்தில் தார்சாலை அமைத்து கொடுத்தால் ஓட்டு போடு வோம். இல்லாவிட்டால் தேர்தலை கண்டிப்பாக புறக்கணிப்போம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## ஆழ்வார்பேட்டையில் மதுபான விடுதி இடிந்து விபத்து: 2 பேர் பலி?

சென்னை, மார்ச். 29

சென்னை ஆழ்வார்பேட்டையில் மெட்ரோ ரெயில் பணி நடந்து வரும் பகுதியில் தனியார் மதுபான விடுதி ஒன்று செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில், அந்த மதுபான விடுதி கட்டடத்தின் மேற்கூரை திடீரென சரிந்து விபத்தில் சிக்கியது. கட்டிட இடிபாடுகளுக்கு இடையே சிக்கி 2 பேர் பலியாகினர் என தகவல் வெளியானது. கட்டட இடிபாடுகளில் சிக்கிய 3 பேரை மீட்கும் பணி நடந்து வருகிறது.



திண்டுக்கல் பாராளுமன்ற தொகுதிக்கு அதிமுக சார்பில் போட்டியிடும் கூட்டணி கட்சி எஸ் டி பி ஐ கட்சியின் சார்பாக போட்டியிடும் முகமதுமுபாரக் என்பவரை ஆதரித்து நிலக்கோட்டையில் தனியார் மண்டபத்தில் கழக செயல் வீரர்களின் ஆலோசனைக் கூட்டம் திண்டுக்கல் சீனிவாசன் மற்றும் நத்தம் விசுவநாதன் ஆகியோர்களின் தலைமையில் நடந்த இந்த கூட்டத்தில் அதிமுக கட்சித் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# பாராளுமன்ற தேர்தலில் ம.தி.மு.க.வின் சின்னம் எது?

திருச்சி, மார்ச். 29

பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் அங்கம் வகிக்கும் ம.தி.மு.க. திருச்சி தொகுதியில் போட்டியிடுகிறது. அத்தொகுதியில் ம.தி.மு.க. வேட்பாளராக துரை வைகோ களமிறங்கியுள்ளார். இதையடுத்து ம.தி.மு.க.வுக்கு பம்பரம் சின்னத்தை பெற அக்கட்சி முயற்சித்தது. ஆனால் தலைமை தேர்தல் ஆணையம் ம.தி.மு.க.வுக்கு பம்பரம் சின்னத்தை ஒதுக்கவில்லை. இதையடுத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.



வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், பாராளுமன்ற தேர்தலில் ம.தி.மு.க.விற்கு பம்பரம் சின்னத்தை ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட முடியாது. ம.தி.மு.க. 2010ம் ஆண்டு அங்கீகாரத்தை இழந்து விட்டது. வேட்பு மனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாள் என்பதால் இந்த வழக்கில் தீர்வு காண இயலாது என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

இந் நி லை யி ல் , திருச்சியில் ம.தி.மு.க. வேட்பாளர்துரைவைகோ செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ பம்பரம் சின்னத்தை தர முடியாது என தேர்தல் ஆணையம் கூறிவிட்டது.

★ மேல்முறையீட்டுக்கு செல்லாம்... ஆனால் பிரசாரம் காரணமாக செல்லவில்லை.

★ இருக்கும் சின்னங்களில் ஒன்றை தேர்வு செய்வோம்.

★ சின்னம் கிடைக்காததால் எங்களுக்கு எந்த பின்னடைவும் இல்லை.

★ வேட்பாளர் யார், அவரின் சின்னம் என்ன என்பதை தெரிந்து கொண்டு வாக்களியுங்கள்.

★ தேர்ந்தெடுக்கும் புதிய சின்னத்தை மக்களிடம் விரைவில் கொண்டு செல்வோம்.

★ தமிழகத்தை பொறுத்தவரை மத்திய அரசு பாரபட்சமாக செயல்பட்டு வருகிறது.

★ திருச்சியில் மக்கள் உற்சாக வரவேற்பு அளித்து வருகின்றனர்.

★ சின்னம் குறித்து நாளை தெரியப்படுத்துவோம்.

இவ்வாறுதுரைவைகோ கூறினார்.

# காஞ்சிபுரத்தில் 200 பவுன் நகை திருட்டு: 81வது முறையாக பிடிபட்ட கொள்ளையன்

காஞ்சிபுரம், மார்ச். 29

காஞ்சிபுரம், விளக்கொளி பெருமாள் கோவில் தெருவில் நகைக்கடை நடத்தி வருபவர் மகாவீர் சந்த். கடந்த சில நாட்களுக்கு முன்பு பூட்டி இருந்த இவரது வீட்டின் பூட்டை உடைத்து 182 பவுன் நகை, ரூ.1 லட்சம் கொள்ளைபோனது. இதே போல் அதே பகுதியைச் சேர்ந்த ராஜேஷ் என்பவரின் வீட்டில் 15 பவுன் நகை திருடு போனது. இது குறித்து விஷ்ணு காஞ்சி போலீசார் வழக்குப்பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர்.



கண்காணிப்பு கேமரா காட்சிகளை வைத்து விசாரித்தபோது இந்த 2 கொள்ளையிலும் ஈடுபட்டது ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தை பகுதியை சேர்ந்த பிரபல கொள்ளையன் சதீஷ் ரெட்டி என்பது தெரிந்தது.

இதையடுத்து தனிப்படை போலீசார் ஆந்திரா சென்று சித்தூர் மாவட்டம் புத்தூர் பகுதியில் பதுங்கி இருந்த அவனை மடக்கி பிடித்து கைது செய்தனர். விசாரணையில் அவன் மீது ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா மற்றும் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் ஏற்கனவே 80 வழக்குகள்இருப்பதுதெரிந்தது. இப்போது 81வது முறையாக கொள்ளை வழக்கில் சதீஷ் ரெட்டி பிடிபட்டு உள்ளார். பல கொள்ளை வழக்குகளில் அவர் பிடிபடாமல் சுற்றி வந்த நிலையில் காஞ்சிபுரம் கொள்ளை வழக்கில் பிடிபட்டு இருக்கிறான்.

அவனிடம் இருந்து 88 பவுன் நகை, ரூ.36 லட்சத்து 10 ஆயிரம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஆடம்பர வாழ்க்கைக்கு ஆசைப்பட்டு அடிக்கடி பல்வேறு இடங்களுக்கு சென்று பூட்டிகிடக்கும் வீடுகளை நோட்டமிட்டு திருடிச் சென்று உள்ளான். ஒரே இடத்தில் கைவரிசை காட்டினால் சிக்கிக்கொள்வோம் என்பதால் இடத்தை அடிக்கடி மாற்றியதாகவும் கூறி உள்ளான்.

கொள்ளை வழக்கில் சிறப்பாக செயல்பட்ட தனிப்படை போலீசாரை உயர் அதிகாரிகள் பாராட்டினர்.

# சேத்துப்பட்டு அருகே சாலை விபத்துகளில் 5 பேர் பலி

விழுப்புரம், மார்ச். 29

சேத்துப்பட்டு விழுப்புரம்ஆரணி சாலையில் தத்தனூர் அருகே இரு சக்கர வாகனத்தில் செஞ்சி அடுத்த பெரியகரம் கிராமத்தை சேர்ந்த கணவன்மனைவி குலதெய்வம் சாமி கும்பிட இரு சக்கர வாகனத்தில் வந்த போது கார் மோதி பலத்த காயமடைந்த நிலையில் சசிகுமார்அவருடைய மனைவி மகாலட்சுமி பலத்த காயமடைந்து பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சசிகுமார் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.



சேத்துப்பட்டு ஆரணி சாலையில் மேல்வில்வராயநல்லூர்பாலம்அருகே இரு சக்கர வாகனத்தில் மேல்சாத்தமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த நெல் அறுவடை இயந்திரஉரிமையாளர் ராஜபக்னேஸ்வரர் அவருடைய நண்பர் சென்னையில் பணிபுரியும் அரசு பேருந்து ஓட்டுனர் வெங்கடேசன் ஆகிய இருவரும் எதிரே வந்த வேனில் மோதி சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

நேற்று இரவு மருத்துவம்பாடி கிராமத்தை சேர்ந்த துளசி என்பவர் தன்னுடைய பேத்தி திருமணத்திற்கு சேத்துப்பட்டு வந்து ஆரணி சாலையில் நடந்து பஜாருக்கு சென்றபோது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதி பலத்த காயமடைந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இன்று காலை 10:30 மணி அளவில் ஆரணியில் இருந்து சேத்துப்பட்டு நோக்கி வந்த லாரியில் இடையங் கொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மரவியாபாரி பலராமன் இருசக்கர வாகனம் மோதிய விபத்தில் சம்பவ இடத்திலேயே பலியானார்

அடுத்தடுத்து 24 மணி நேரத்தில் 3 விபத்தில் 5 பேர் பலியானதில் சேத்துப்பட்டு போலீசார் செய்வதறியாது திணறி வருவது குறிப்பிடத்தக்கது

# ஸ்மார்ட் சிட்டி திட்டம் குறித்து விவாதிக்க அ.தி.மு.க தயாரா? அண்ணாமலை கேள்வி

கோவை, மார்ச். 29

கோவை சூலூர் அருகே பாப்பம்பட்டி பிரிவில் பா.ஜ.க மாநில தலைவரும், கோவை பாராளுமன்ற தொகுதி வேட்பாளருமான அண்ணாமலை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

மாற்றம் வருவதற்கு மக்கள் விரும்புகிறார்கள். பா.ஜ.க கூட்டத்திற்கு பொதுமக்கள் தன்னெழுச்சியாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தன்னெழுச்சியாக வந்து பா.ஜ.கவுக்காக வாக்கு சேகரித்து வருகிறார்கள். வருகிற பாராளுமன்ற தேர்தலில் கோவை தொகுதியில் 60 சதவீத வாக்குகளை பெற்று பா.ஜ.க வெற்றி பெறும்.

நான் கோவை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிட்டாலும் மாநில தலைவர் என்ற முறையில் தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து, தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் மேற்கொள்ள வேண்டி உள்ளது.

வருகிற 29ந்தேதி (வெள்ளிக்கிழமை) முதல் ஏப்ரல் 11ந் தேதி வரை சுற்றுப்பயணம் செய்து வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரிக்க உள்ளேன்.

இதனால் என்னால் கோவை பாராளுமன்ற தொகுதியில் உள்ள அனைத்துக்கிராமங்களுக்கும் செல்ல முடியாத நிலை உள்ளது. இருந்தாலும் கோவை மக்கள் எனக்காக தாமரை சின்னத்தில் ஒவ்வொரு பகுதியாக சென்று வாக்கு சேகரிப்பார்கள் என நம்புகிறேன்.

கோவை மாவட்டத்தில் ஸ்மார்ட் சிட்டி திட்டம் சரியான முறையில் செயல்படுத்தப்படவில்லை.

இதற்கு முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி தான் பொறுப்பேற்க வேண்டும்.

மேலும் கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் அவர்கள், மத்திய அரசு கொடுத்த நிதிகளையும் சரியாக கையாளவில்லை.

இது தொடர்பாக அவர்களிடம் 10 கேள்விகளை நான் தருகிறேன். அதுகுறித்து விவாதம் செய்ய தயார்என்றால்அவர்களை என்னுடன் உட்கார வையுங்கள். ஸ்மார்ட் சிட்டிக்காக எத்தனை திட்டங்கள் கொண்டு வரப்பட்டது. யாருக்கெல்லாம் காண்ட்ராக்ட் கொடுக்கப் பட்டது என அவர்கள் சொல்லட்டும்.

தி.மு.க தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் சட்டசபை தேர்தலின் போது நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் மீது நடவடிக்கை எடுப்பேன் என தெரிவித்தார்.

ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் அப்படி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக தற்போது 2 கட்சியினரும் ஒன்றாக கூட்டு சேர்ந்துள்ளனர்.

வாக்குகளை விலைக்கு வாங்குவதற்காக கோவை பாராளுமன்ற தொகுதியில் ஒவ்வொரு கிராமத்திற்குள்ளும் தி.மு.க.வினர் மூட்டை, மூட்டையாக பணத்துடன் இறங்கி உள்ளனர்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# திருவள்ளூர்: காங்கிரஸ் வேட்பாளர் தேர்தல் விதியை மீறி 6 நபர்களுடன் சென்று வேட்பு மனு தாக்கல்

சென்னை, மார்ச். 29

பாராளுமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 19ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது.

இதற்காக வேட்பு மனு தாக்கல் கடந்த 20ஆம் தேதி தொடங்கி இன்று மதியம் 3 மணியுடன் முடிவடைகிறது.

இதனையடுத்து அரசியல் கட்சிகள் தங்களது சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்து வருகின்றனர்.



இதில் திருவள்ளூர் பாராளுமன்ற தனி தொகுதியில் போட்டியிடும் தேமுதிக, நாம் தமிழர் கட்சி, பகுஜன் சமாஜ் கட்சி, பாரதிய ஜனதா கட்சி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் வேட்பு மனு தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் கடைசி நாளான வேட்பு மனு தாக்கல் செய்ய திமுக கூட்டணியில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி சசிகாந்த் செந்தில் ஆயிரக்கணக்கான தொண்டர்களுடன் தெருக்கூத்து, மேளதாளத்துடன் ஊர்வலமாக வந்து தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

இந்த வேட்பு மனு தாக்கலின்போது வேட்பாளருடன் 4 பேர் மட்டுமே வர தேர்தல் ஆணையம் அனுமதி அளித்தது.

இந்நிலையில் வேட்பாளர் உடன் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.முநாசர், திமுக எம்எல்ஏக்கள் வி. ஜி ராஜேந்திரன், மாதவரம் சுதர்சனம் கும்மிடிப்பூண்டி கோவிந்தராஜன், பொன்னேரி காங்கிரஸ் எம்எல்ஏ துரை சந்திரசேகர் உள்பட 5 பேர் வந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான த.பிரபுசங்கரிடம் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் சசிகாந்த் செந்தில் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார். பின்னர் சுதாரித்துக் கொண்ட மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி பிரபு சங்கர் தேர்தல் விதிகளை மீறி 6 பேர் இருப்பதால் ஒருவர் வெளியேற வேண்டும் என எச்சரித்தார். இதையடுத்து மாவட்ட காங்கிரஸ் தலைவரும் பொன்னேரி எம்எல்ஏவுமான துரை சந்திரசேகர் வேட்பு மனு தாக்கல் அறையில் இருந்து ஓட்டம் பிடித்தார்.

# இந்திய கல்வி நிறுவனங்கள் மிகச்சிறந்த கல்வி சிந்தனையர்களை உருவாக்கி வருகிறது விஐடி பல்கலைக்கழக ஆண்டு விழாவில் ஏ ஐ சி டி இ தலைவர் சீதாராம் பேச்சு

வேலூர், மார்ச்29

வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தின் ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா விஐடி வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் தலைமையில் நடைபெற்றது விழாவில் அகில இந்திய தொழில் நுட்ப கல்விக் கழக தலைவர் டி. ஜி. சீதாராம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். விஐடி துணைத் தலைவர்கள் சங்கர் விசுவநாதன், டாக்டர் ஜி.வி. செல்வம் ,உதவி துணைத் தலைவர் காதம்பரி எஸ். விசுவநாதன் ஆகியோர் விழாவிற்கு முன்னிலை வகித்தனர் விழாவிற்கு தலைமை தாங்கி சிறந்த மாணவர்களுக்கு விருதுகளும் கல்வி உதவித் தொகையும் வழங்கி விஐடி வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் பேசுவையில், இந்தியாவில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதிலும் இலவச கல்வி அளிப்பதிலும் விஐடி பல்கலைக்கழகம் முன்மாதிரியாக செயல்பட்டு வருகிறது இந்த ஆண்டு மத்திய நிதி நிலை அறிக்கை ரூ. 47 லட்சம் கோடிக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது ஆனால் அதில் ரூ.1 லட்சம் கோடி மட்டுமே கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது மொத்த உள்நாட்டு வருவாயில் கல்விக்கு ஆறு சதவீதம் நிதி ஒதுக்க வேண்டும் என்பது பல ஆண்டுகால கோரிக்கையாகும் ஆனால் இதுவரை



அவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை இதனால் உயர்கல்வி சேர்க்கையில் மொத்தம் உள்ள 198 நாடுகளில் இந்தியா 155 வது இடத்திற்கு பின் தங்கியுள்ளது ஒரு நாடு பொருளாதாரத்தில் வளர வேண்டும் என்றால் கல்வியில் மேம்பட்டால் மட்டுமே முடியும் எனவே மத்திய மாநில அரசுகள் கல்விக்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வர வேண்டும் இதே போல் கல்வி நிறுவனங்கள் மீது திணிக்கப்படும் வரிச் சுமைகளை குறைக்கவும் உரிமங்கள் பெறுவதில் எளிமையான வழிமுறைகளை ஏற்படுத்தவும் வேண்டும் இந்த நடவடிக்கையின் மூலமாக உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையை உயர்த்த முடியும் என வேந்தர் கோ.விசுவநாதன் பேசினார் விழாவில் சிறப்பு விருந்தினராக அகில இந்திய தொழில்நுட்ப கல்விக் கழக தலைவர் டி .ஜி .சீதாராம் கலந்து கொண்டு பேசுகையில், ஆராய்ச்சி கல்வி கண்டுபிடிப்புகளும் அதற்கான காப்புரிமை பெறுவதிலும் உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்துக்கு முன்னேறி உள்ளது குறிப்பாக 2023 ஆம் ஆண்டில் மட்டும் 80 ஆயிரம் கண்டுபிடிப்புகள் காப்புரிமைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன 2010 ஆம் ஆண்டில் இந்த அளவுக்கு இல்லை தற்போது தான் கண்டுபிடிப்புகள் அதிக அளவில் நடைபெற்று வருகின்றன 2023 ஆம் ஆண்டில் 1.25 லட்சம் புத்தாக்க நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளன இந்த நிறுவனங்கள் மூலம் 500 பில்லியன் டாலர்கள் அளவுக்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய சாதனையாகும் மேலும் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் இந்தியா மிகச் சிறப்பான வளர்ச்சி அடைந்து வருகிறது ஐஐடி என்ஐடி படித்தவர்களை விட அகில இந்திய தொழில் நுட்பக் கல்லூரிகளில் இருந்து படித்து வருபவர்கள் தான் அதிக அளவில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தில் சேருவதாக ஒரு முறை இஸ்ரோ தலைவர் சோமாத் தெரிவித்தார் அந்த அளவுக்கு இந்திய கல்வி நிறுவனங்கள் மிகச் சிறந்த கல்வி சிந்தனையாளர்களை உருவாக்கி வருகிறது மேலும் புதிய கல்விக் கொள்கை என்பது கல்வி விளையாட்டு தனித்திறன் வளர்ப்பு என ஏராளமான வாய்ப்புகளை உள்ளடக்கியதாக உள்ளது இந்த புதிய கல்விக் கொள்கையின் அடிப்படையில் அகில இந்திய தொழில் நுட்ப கல்வி கழகம் ஆண்டுக்கு ரூபாய் 300 கோடி அளவுக்கு கல்வி உதவித் தொகையும் வழங்கி வருகிறது செயற்கை நுண்ணறிவு வளர்ச்சி என்பது எதிர்காலத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் அத்தகைய மாற்றத்திற்கு ஏற்ப மாணவர்களும் தங்களை தயார் படுத்திக் கொள்ளவும் மாற்றங்களுக்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு பிறகு வேலை அளிக்கும் நிறுவனங்கள் மாணவர்களின் கல்வி அறிவை விட தனி திறன்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கக்கூடும் அதனால் மாணவர்கள் புத்தக அறிவைக் கடந்து பலதரப்பட்ட திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் பேசினார் முன்னதாக விஐடி பதிவாளர் ஜெயபாரதி அனைவரையும் வரவேற்றார் இனை துணை வேந்தர் பார்த்தசாரதி மல்லி பல்கலைக்கழக ஆண்டறிக்கையை வாசித்தார் மாணவர் நலன் குறித்த அறிக்கையை மாணவர் நலன் இயக்குனர் நைஜூ சமர்ப்பித்தார் விளையாட்டு அறிக்கையை உடற்கல்வி இயக்குனர் தியாகராஜன் சமர்ப்பித்தார்

# காட்டுப்பன்றியை வேட்டையாடி இறைச்சியை விற்பனை செய்த 4 பேர் கைது

ஏரியூர், மார்ச். 29

பென்னாகரம் அருகே பதனவாடி காப்புக்காடு நெருப்பூர் சிறுதங்கள்மேடு பகுதியில் கன்னிவலை வைத்து காட்டுப்பன்றியை பிடித்து கொன்று இறைச்சி துண்டுகளாக்கி 10 பொட்டலங்களாக விற்ற 4 பேரை வனத்துறையினர் கைது செய்தனர்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பதனவாடி காப்புக்காடு பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாகும்.



இங்கு நெருப்பூர்சிறுதங்கள் மேடு பகுதியில் மர்ம நபர்கள் சிலர் காட்டுப்பன்றிகளை கன்னி வலை வைத்து வேட்டையாடுவதாக மாவட்ட வன அலுவலருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

தகவலையடுத்து மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம் உத்தரவின் பேரில் பென்னாகரம் வனசரக அலுவலர் செந்தில்குமார் தலைமையில் வனவர் சக்திவேல், வனக் காப்பாளர்சங்கர்,கணேஷ், செல்வகுமார் உள்ளிட்ட வனகுழுவினர் பதனவாடி காப்புக்காடு நெருப்பூர் சிறுதங்கள் மேடு வனபகுதியில் தீவிர ரோந்து பணியில் மேற்கொண்டனர்.

அப்போது அதே பகுதியைச் சேர்ந்த மாது மகன் மணிமுத்து (வயது 33), ஆத்து மேட்டூர் பகுதியை சேர்ந்த பொன்னுசாமி மகன்கருப்பண்ணன்(32), சத்யாநகர் பகுதியை சேர்ந்த குப்புசாமி மகன் அபிராமன் (37), பண்ணவாடியான் காடு பகுதியைச் சேர்ந்த கோவிந்தராஜ் மகன் வன்னியன் (50) ஆகிய 4 பேரை பிடித்து வனத்துறையினர் விசாரித்தனர்.

அப்போது 4 பேரும் சேர்ந்து கன்னி வலை வைத்து காட்டு பன்றியை பிடித்து, அந்த பன்றியை வெட்டி இறைச்சி துண்டுகளாக்கி 10 பொட்டலங்களாக கட்டி விற்பனை செய்ததை ஒப்புக்கொண்டனர்.

இந்த சம்பவம் குறித்து 4 பேரை கைது செய்த வனத்துறையினர் அவர்களிடமிருந்து அபராதமாக ரூ.1,50,000யை வசூலித்தனர்.

வனப்பகுதியிலோ அல்லது வெளியே வரும் வன விலங்குகளை வேட்டையாடுபவர்களை கடும் நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல் சிறைக்கு அனுப்பப்படும் என வனத்துறையினர் எச்சரித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தேர்தல் பறக்கும் படைகள் , நிலையான கண்காணிப்பு குழுக்கள் ஆய்வு செய்யும் பணிகளை சிதம்பரம் பாராளுமன்ற தொகுதியின் தேர்தல் செலவினப் பார்வையாளராக நேரில் பார்வையிட்டு, ஆய்வு

அரியலூர், மார்ச். 29

சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி பாராளுமன்ற தேர்தல் 2024, ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் பறக்கும் படைகள் , நிலையான கண்காணிப்பு குழுக்கள் மேற்கொள்ளும் தேர்தல் பணிகளை சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் செலவினப் பார்வையாளர் நிதின் சந்த் நெகி, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



அதன்படி உடையார் பாளையம், ஆண்டிமடம், குருவாலப்பர்கோவில், அணைக்கரை, மற்றும் காடுவெட்டி ஆகிய பகுதிகளில் தேர்தல் பறக்கும் படைகள் , நிலையான கண்காணிப்பு குழுக்கள் வாகனங்களை ஆய்வு செய்யும் பணிகளை, ஆய்வு செய்து அனைத்து இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை முறையாக ஆய்வு மேற்கொள்ளுமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார் மேலும், ஆய்வு மேற்கொண்ட வாகனங்களின் எண்ணினை பதிவேடுகளில் பதிவு செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களை தேர்தல் செலவினப் பார்வையாளர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில், அரசு அலுவலர்கள், தேர்தல் பறக்கும் படை குழுவினர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# தேர்தல் பொறுப்பு அலுவலர்களுடன் தேர்தல் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

கிருஷ்ணகிரி, மார்ச். 29

09.கிருஷ்ணகிரி பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024 நடைபெறயுள்ளதை யொட்டி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட தேர்தல் பொதுப் பார்வையாளர் கிரண் குமாரி பாசி , செலவின பார்வையாளர்கள் சுதன்ஷூ சேகர் கௌதம், ஐ.ஆர்.எஸ். (51.ஊத்தங்கரை, 52.பர்கூர், 53.கிருஷ்ணகிரி),, போசலே சந்திப் தின்கர் ஐ.ஆர்.எஸ்., (54.வேப்பனஹள்ளி, 55.ஓசுர், 56.தளி) மற்றும் காவல்துறை பார்வையாளர் விவேக் ஷியாம் ஆகியோர், தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் கே.எம். சரயு தலைமையில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் , தேர்தல் பொறுப்பு அலுவலர்களுடன் தேர்தல் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.




தேர்தல் பொதுப் பார்வையாளர், செலவின பார்வையாளர்கள் மற்றும் காவல்துறை பார்வையாளர் ஆகியோர் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி பாராளுமன்ற தொகுதிக் குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் தேர்தல் பணிகளில் முழு ஈடுபாட்டுடன் பணியாற்ற வேண்டும். அவரவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணி பொறுப்புகளை தெரிந்திருக்க வேண்டும். தேர்தல் செலவினங்கள் குறித்த புகார்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். சட்டமன்ற தொகுதிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள உதவி செலவின மேற்பார்வையாளர்கள் வேட்பாளர்களின் செலவுகளை கண்காணிக்க வேண்டும். மேலும் தேர்தல் செலவினம் குறித்த புகார் பதிவேடுகளை முறையாக பராமரித்து அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து முறையாக பதிவு செய்ய வேண்டும். எனவே, தேர்தல் சிறப்பான முறையில் நடைபெற அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெ.தங்கதுரை கூடுதல் ஆட்சியர்/ திட்ட இயக்குநர், ஊரக வளர்ச்சி முகமை வந்தனா கர்க் தனி மாவட்ட வருவாய் அலுவலர் பழனிதேவி, ஓசுர் மாநகராட்சி ஆணையாளர் டி.சினேகா ஓசுர் சார் ஆட்சியர் செல்வி.பிரியங்கா மகளிர் மேம்பாட்டு திட்ட இயக்குநர்

திரு.பெரியசாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பெ.ச.லெனின், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் சீ.பாபு, செலவின பொறுப்பு அலுவலர் கதிரவன், தேர்தல் வட்டாட்சியர் சம்பத், தனி வட்டாட்சியர் ஜெய்சங்கர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அனைத்து மாற்றுத்திறனாளிகளும் தங்களது கடமையை சிறப்பாக ஆற்ற, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக, மாவட்ட குழு உறுப்பினர்களுட னான மாவட்ட குழு கூட்டம்

ஈரோடு, மார்ச். 29

பாராளுமன்ற தேர்தல் 2024யையொட்டி, ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில், அனைத்து மாற்றுத்திறனாளிகளும் தங்களது கடமையை சிறப்பாக ஆற்ற, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது தொடர்பாக, மாவட்ட குழு உறுப்பினர்களுடனான மாவட்ட குழு கூட்டம் நடைபெற்றது.




இக்கூட்டத்தில், ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது,

17.பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மாற்றுத்திறன் படைத்தவர்களும் தங்களது ஜனநாயக கடைமையை நிறைவேற்ற வேண்டி வாக்களிக்க ஏதுவாக மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு வாக்களிக்க ஊக்குவித்தலுக்கான மாவட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, 18 வயது நிறைந்த அனைத்து மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக தேர்தல் நாள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு பேரணி நடத்த வேண்டும். மேலும், வாக்குசாவடி மையம் தரை தளத்தில் அமைக்கவும், நுழைவாயில் மற்றும் வாக்களிக்கும் பெட்டிவரை தடையற்ற பாதை அமைக்கப்பட்டுள்ளதையும் அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க ஏதுவாக அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சக்கர நாற்காலிகள் அமைக்கப்பட வேண்டும். வாக்குச்சாவடி மையங்களில் வைக்கப்பட்டிருக்கும் சக்கர நாற்காலிகளில் கைப்பிடி போன்ற அனைத்து பாகங்களும் உரிய முறையில் பராமரிப்பில் இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு உதவ பயிற்சி பெற்ற தன்னர்வலர்கள் மற்றும் காவலர்கள் வாக்குச்சாவடி மையத்தில் இருக்க வேண்டும். அடையாள அட்டையுடன் வரும் பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் உதவியாளருடன் வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும். பார்வை குறைபாடு உடைய மாற்றுத்திறன் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக வாக்களிக்கும் பெட்டியில் தாங்களே தொட்டு உணர்ந்து வாக்களிக்க ஏதுவாக பிரெய்லிமொழி அடையாளத்தை பொறிக்கும் முறை உள்ளதை உறுதி செய்ய வேண்டும். மேலும், 24 மணி நேரமும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு சைகை மொழி விளக்கங்களுடன் கூடிய தொடர்பு எண் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.



இராணிப்பேட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அரக்கோணம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் சுனில்குமார் முன்னிலையில் இராணிப்பேட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் வளர்மதி வேட்பு மனுக்கள் பரிசீலனையினை மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவின்படி பாராளுமன்ற பொதுத் தேர்தல் தொடர்பாக தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகள்

புதுக்கோட்டை, மார்ச். 29

இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024 தொடர்பாக, 24திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட, 180 புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி மற்றும் 178கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதியில், தேர்தல் தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து, மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், திருச்சி பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் எம்.தினேஷ் குமார், தலைமையில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. எனவே இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி நடைபெறவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலை நேர்மையான முறையில் நடத்திட அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும்.



பின்னர், இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவின்படி, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024 தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறை, ஊடக மையம், ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு செயல்பாடுகளை, திருச்சி பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் எம்.தினேஷ் குமார், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் ஐ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) எஸ்.வெங்கடாசலம், தேர்தல் பணிகளின் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பு அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.




2024 பாராளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம் கார்ப்பேட்டை மீனாட்சி மருத்துவ கல்லூரியில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் கலைச்செல்வி மோகன் தலைமையில் நடைபெற்றது.

# இராமநாதபுரம் பாராளு மன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையம்: கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

இராமநாதபுரம், மார்ச். 29

இராமநாதபுரம் பாராளு மன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் மையத்தை இராமநாதபுரம் தேர்தல் நடத்தும் அலுவலர் பா.விஷ்ணு சந்திரன் முன்னிலையில் தேர்தல் பார்வையாளர் (பொது) பண்டாரி யாதவ், தேர்தல் பார்வையாளர் (காவல்துறை) சத்ய வீர் கட்டாரா, ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.





இந்த ஆய்வின்போது இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான அறந்தாங்கி, பரமக்குடி (தனி), இராமநாதபுரம், திருவாடானை, முதுகுளத்தூர், திருச்சுழி ஆகிய சட்டமன்ற தொகுதிகளிலிருந்து பதிவான வாக்குகள் இராமநாதபுரம் புல்லங்குடி ஊராட்சியில் உள்ள அண்ணா பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணப்படுவதையொட்டி, அண்ணா பொறியியல் கல்லூரியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாக்கப்படும் அறை, வாக்கு எண்ணும் அறை மற்றும் தபால் வாக்கு எண்ணும் அறை உள்ளிட்ட பகுதிகளை பார்வையிட்டதுடன் கல்லூரியில் மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன் கல்லூரி வளாகம் முழுவதும் உள்ள பகுதிகளை தேர்தல் பார்வையாளர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்த ஆய்வின்போது கூடுதல் ஆட்சியர் வீர் பிரதாப் சிங், உதவி ஆட்சியர் (பயிற்சி) எஸ்.சிவானந்தம், , பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் குருதிவேல் மாறன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




விருதுநகர் கலெக்டர் அலுவலக வளாகத்தில் மக்களவை பொதுத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறுவதை முன்னிட்டு வாக்காளர் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி தேர்தல் திருவிழா தேசத்தின் பெருவிழா என்ற தலைப்பில் இந்திய திருநாட்டின் பாராளுமன்ற தேர்தல்கள் குறித்த வரலாற்றை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்ட புகைப்பட கண்காட்சியுடன் கூடிய விழிப்புணர்வு வாகனத்தை கலெக்டர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## ரீமேக் ஆகும் கமல்ஹாசனின் சூப்பர்ஹிட் படம் ஹீரோவாக நடிக்கும் அசோக் செல்வன்





உலகநாயகன் கமல்ஹாசன் நடிப்பில் 1988ல் வெளிவந்த சத்யா திரைப்படம் மிகப்பெரிய வெற்றியை பெற்றது. இளையராஜா இசையில், இப்படத்தில் இடம் பெற்ற வலையோசை என்ற பாடல் கிளாசிக் பாடல்களின் வரிசையில் இணைந்தது.

அண்ணாமலை , பாட்சா உள்ளிட்ட பல வெற்றி படங்களை இயக்கிய சுரேஷ் கிருஷ்ணாவின் முதல் படம் இந்த சத்யா தான். 1985ம் ஆண்டு ஹிந்தியில் வெளிவந்த அர்ஜுன் என்ற திரைப்படத்தின் ரீமேக் படம் தான் இந்த சத்யா. கமல்ஹாசனின் சினிமா வாழ்க்கையில் மிக முக்கியமானபடமானசத்யாதற்போதையகாலகட்டத்திற்கு ஏற்றாற்போல ரீமேக் செய்யப்பட இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இப்படத்தில் அசோக் செல்வன் நாயகனாக நடிக்க இருக்கிறார் என்றும், போர் தொழில் படத்தை இயக்கிய விக்னேஷ் ராஜா இப்படத்தை இயக்குவார் என்றும் சொல்லப்படுகிறது.

## தெலுங்கில் மஞ்சும்மல் பாய்ஸ் ரிலீஸ் தேதி அறிவிப்பு




இயக்குனர் சிதம்பரம் இயக்கத்தில் பிப்ரவரி 22ஆம் தேதி வெளியான படம் மஞ்சும்மல் பாய்ஸ். படம் வெளியாகி ஒரு மாதம் நிறைவடைந்த நிலையில், உலகளவு வசூலில் ரூ.200 கோடிக்கும் மேல் வசூல் செய்துள்ளது.

மலையாள சினிமா திரையுலகில் 200 கோடி வசூல் செய்த முதல் படம் என்ற பெருமை மஞ்சும்மல் பாய்ஸ் படத்திற்கு கிடைத்துள்ளது. படம் வெளிவந்து ஒரு மாதம் ஆன நிலையில் இப்படம் 200 கோடிக்கும் மேல் வசூல் செய்திருப்பது மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்கியுள்ளது.

இந்தியா பாக்ஸ் ஆபிஸ் கலெக்ஷனில் மட்டும் 110 கோடி வசூலித்துள்ளது. தமிழகத்தில் மட்டும் 52 கோடிக்கு மேல் வசூலித்துள்ளது.

2005ல் நடந்த உண்மை சம்பவத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட இப்படம் மக்களால் மிகவும் கொண்டாடப்படுகிறது.

இந்த படம் மலையாளம், தமிழில் ரிலீஸ் ஆகி வெற்றிகரமாக ஓடி வரும் நிலையில், வரும் ஏப்ரல் 6ம் தேதி தெலுங்கு மொழியில் இப்படம் வெளியாக உள்ளது.

## அரண்மனை படத்தின் 4ம் பாகம் ஏப்ரலில் வெளியாகிறது







சுந்தர்.சி இயக்கத்தில் அரண்மனை திரைப்படம் 2014 ல் வெளியாகி வெற்றி பெற்றது. இதில் ஹன்சிகா, ஆண்ட்ரியா, ராய் லக்ஷ்மி, வினய் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தனர்.

இதன் வெற்றி காரணமாக, 'அரண்மனை2' திரைப்படத்தை 2016ல் த்ரிஷா, ஹன்சிகாவை வைத்து சுந்தர் சி இயக்கினார். அந்த படமும் வெற்றி பெற்றது.

இதனையடுத்து, 2021ல் அரண்மனை படத்தின் 3ம் பாகத்தை இயக்கினார். அப்படத்தில், ஆர்யா, ராஷி கன்னா, ஆண்ட்ரியா, சாக்சி அகர்வால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இப்படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்றது. இந்நிலையில், சுந்தர்.சி இயக்கத்தில் அரண்மனை 4 திரைப்படம் உருவாகி உள்ளது. இப்படத்தில், இதில் தமன்னா, ராஷி கண்ணா, யோகி பாபுமற்றும்சுந்தர்சிமுக்கியகதாபாத்திரங்களில்நடித்துள்ளனர்.இப்படத்திற்குஹிப்ஹாப்ஆதிஇசையமைத்துள்ளார்.

இந்நிலையில், இப்படம் அடுத்த மாதம் வெளியாகிறது என படக்குழு போஸ்டர் வெளியிட்டு தெரிவித்துள்ளது.

அரண்மனை படத்தின் முதல் மூன்று பாகங்கள் போலவே குடும்பங்கள் கொண்டாடும் வகையிலான படமாக இப்படம் இருக்கும் என் எதிர்பார்க்கப்படுகிறது.

## வதந்திக்கு முற்றுப்புள்ளி..! அதிதி ராவை கரம் பிடித்தார் நடிகர் சித்தார்த்



நடிகர் சித்தார்த் தமிழ், தெலுங்கு, இந்தி என்று மூன்று மொழிகளில் நடித்து ரசிகர்களுக்கு அறிமுகமானவர். இவர் நடிப்பது மட்டுமல்லாமல் இடாகி என்ற தயாரிப்பு நிறுவனம் மூலம் படங்களையும் தயாரித்து வருகிறார். இவர் அவ்வப்போது சமூக கருத்துகளை பேசி சர்ச்சையிலும் சிக்கியுள்ளார்.

சமீப காலமாக நடிகர் சித்தார்த்தும் நடிகை அதிதி ராவும் காதலித்து வருவதாக கிசுகிசுக்கப்பட்டு வந்தது. இரு தரப்பிலும் இதை மறுக்கவோ, ஏற்கவோ இல்லை. மேலும்,இருவரும்பொதுநிகழ்ச்சிகளிலும் ஒன்றாகவே பங்கேற்றனர். இது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளத்தில் வைரலானது.

இந்நிலையில், நீண்ட நாட்களாக பரவி வந்த வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

நடிகர் சித்தார்த்துக்கும், நடிகை அதிதி ராவ் ஹைதரிக்கும் இன்று தெலங்கானாவில் உள்ள வனபர்த்தியில் திருமணம் நடைபெற்றுள்ளது.

இவர்களது திருமணத்தில் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

## விக்னேஷ் சிவனை 20 நாள் பிரிந்த வேதனையை பகிர்ந்த நயன்தாரா





பிரபல இயக்குனர் விக்னேஷ் சிவன் 'லவ் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன்' என்ற புதிய படத்தை இயக்கி வருகிறார். இது காதல், நகைச்சுவை திரைப்படமாகும். இப்படத்தில் கதாநாயகனாக பிரதீப் ரங்கநாதன், கீர்த்தி ஷெட்டி, எஸ்.ஜே.சூர்யா, யோகிபாபு உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இப்படத்தை 'செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ' மற்றும் ரவுடி பிக்சர்ஸ் சார்பில்எஸ்.எஸ்.லலித்குமார்மற்றும்விக்னேஷ் இணைந்து தயாரித்துள்ளனர்.இந்த படத்தின் படப்பிடிப்புகள் கடந்த சில வாரங்களாக மலேசியா மற்றும் சிங்கப்பூரில் நடந்தது. இந்நிலையில்ந யன்தாரா 2 மகன்களை கையில் வைத்திருக்கும் புகைப்படங்களையும், நயன்தாரா அவர்களுடன் விளையாடும் புகைப்படங்களையும் தனது அதிகாரப்பூர்வ இன்ஸ்டாகிராம் பதிவில் விக்னேஷ் நேற்று பகிர்ந்தார். "படப்பிடிப்பு பணிகள் காரணமாக வாரக்கணக்கில் குடும்பத்தினரிடம் இருந்து பிரிந்து இருக்கிறேன்". தனது குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவதை தவறவிட்டேன். விரைவில் தனது அன்பு குழந்தைகள், மனைவி நயன்தாராவை அரவணைக்க காத்திருக்கிறேன்" என குடும்பத்தை பிரிந்த ஏக்கத்தில் அவ்வாறு விக்னேஷ் பதிவிட்டு இருந்தார். இந்நிலையில் நடிகை நயன்தாரா இன்று இணையதளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் விக்னேஷ் நயன்தாரா ஜோடியாக கட்டிப்பிடித்து அன்போடு தழுவும் படங்கள், இரட்டை குழந்தைகளை பாசத்துடன் கொஞ்சுவது போன்ற படங்களைப் பகிர்ந்துள்ளார்.

நயன்தாரா வெளியிட்டுள்ள இந்த பதிவு சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. படப்பிடிப்பிற்காக வீட்டை விட்டு பிரிந்து சென்ற கணவர் மீது நயன்தாரா தனது காதலை அதில் வெளிப்படுத்தி உள்ளார். நயன்தாரா இணையத்தில் வெளியிட்ட பதிவில் கூறி இருப்பதாவது:

'சிங்கப்பூரில் இருந்து 20 நாடுகளுக்குப் பிறகு திரும்பிய உங்களை ( விக்னேஷ்) பார்த்தபோது நாங்கள் மூவரும் எப்படி உணர்ந்தோம் என்பதை விளக்க முடியவில்லை. நாங்கள் உங்களை மிகவும் தவறவிட்டோம். நான் உங்களை நேசிக்கிறேன் என்று தெரிவித்து உள்ளார்.

## ஐபிஎல் வரலாற்றில் முதல் 10 ஓவரில் அதிக ரன்: மும்பையை பழி தீர்த்த சன்ரைசர்ஸ் ஐதராபாத்



சன்ரைசர்ஸ் ஐதராபாத் மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கு இடையிலான போட்டி ஐதராபாத் ராஜிவ் காந்தி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் பந்து வீச்சை தேர்வு செய்தது.

சன்ரைசர்ஸ் ஐதராபாத் முதல் 2 ஓவரில் 18 ரன்கள் எடுத்திருந்தது. அதன்பின் ருத்ர தாண்டவம் ஆடியது. அறிமுக வீரரான மபாகா 3வது ஓவரை வீசினார். இந்த ஓவரில் டிராவிட் ஹெட் இரண்டு சிக்ஸ், இரண்டு பவுண்டரி விளாசினார். இந்த ஓவரில் ஐதராபாத் அணிக்கு 22 ரன்கள் கிடைத்தது.

4வது ஓவரை பும்ரா வீசினார். இந்த ஓவரில் 5 ரன்கள் மட்டுமே கிடைத்தது. 5வது ஓவரின் முதல் பந்தில் மயங்க் அகர்வால் 13 பந்தில் 11 ரன்கள் எடுத்து வெளியேறினார். இந்த ஓவரில் டிராவிஸ் ஹெட் 3 பவுண்டரிகள் விளாசினார். ஒரு விக்கெட்டை இழந்தாலும் 13 ரன்கள் எடுத்தது.

5வது ஓவரை கோட்சி வீசினார். இந்த ஓவரில் அபிஷேக் சர்மா ஒரு சிக்ஸ், டிராவிஸ் ஹெட் ஒரு சிக்ஸ் மற்றும் இரண்டு பவுண்டரி அடிக்க 23 ரன்கள் கிடைத்தது. இதன்மூலம் பவர்பிளேயில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் 1 விக்கெட் இழப்பிற்கு 81 ரன்கள் குவித்தது.

7வது ஓவரை சாவ்லா வீசினார். இந்த ஓவரில் அபிஷேக் சர்மா 3 சிக்ஸ் விளாசினார். இதனால் இந்த ஓவரில் 21 ரன்கள் கிடைத்தது. ஸ்கோர் 100 ரன்னைத் தாண்டியது. 8வது ஓவரை கோட்சி வீசினார். இந்த ஓவரில் டிராவிஸ் ஹெட் 24 பந்தில் 62 ரன்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இந்த ஓவரில் இரண்டு பவுண்டரி, ஒரு பைஸ் பவுண்டரியுடன் 15 ரன்கள் கிடைத்தது. 9வது ஓவரை ஹார்திப் பாண்ட்யா வீசினார். இந்த ஓவரில் ஒரு சிக்ஸ் உடன் 11 ரன்கள் கிடைத்தது. 10வது ஓவரை மபாகா வீசினார். இந்த ஓவரில் அபிஷேக் சர்மா இரண்டு சிக்ஸ், இரண்டு பவுண்டரி விளாசினார். இதனால் 20 ரன்கள் கிடைத்தது. மொத்தமாக சன்ரைசர்ஸ் ஐதராபாத் 10 ஓவரில் 148 ரன்கள் குவித்தது.

இதன் மூலம் ஐபிஎல் கிரிக்கெட்டில் வரலாற்றில் முதல் 10 ஓவரில் அதிக ரன்கள் குவித்த அணி என்ற சாதனையைப் படைத்துள்ளது.

மும்பை இந்தியன்ஸ் இதற்கு முன் 2021ல் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கெதிராக 131 ரன்கள் குவித்துள்ளது. 2014ல் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிக்கெதிராக பஞ்சாப் கிங்ஸ் 131 ரன்கள் எடுத்துள்ளது.

2008ல் மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிராக டெக்கான் சார்ஜர்ஸ் 130 ரன்கள் எடுத்துள்ளது. 2016ல் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கெதிராக ஆர்சிபி 129 ரன்கள் எடுத்துள்ளது.

## மியாமி ஓபன் டென்னிஸ்: அரையிறுதிக்கு முன்னேறிய எலெனா ரைபாகினா

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் மியாமி ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.





இதில் இன்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில்கஜகஸ்தானின்எலெனாரைபாகினா கிரேக்க டென்னிஸ் வீராங்கனையான மரியா சக்காரியை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 75 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றிய ரைபகினா 2வது செட்டை 67 (47) என்ற புள்ளிக்கணக்கில் இழந்தார். இதையடுத்து வெற்றியாளரை தீர்மானிக்கும் 3வது செட் பரபரப்பாக நடைபெற்றது.

இந்த செட்டில் முன்னணி வீராங்கனையான ரைபகினா 64 என்ற புள்ளிக்கணக்கில் மரியா சக்காரியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினார். நாளை நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் ரைபகினா பெலாரசின் விக்டோரியா அசரென்காவை எதிர்கொள்கிறார்.

## 31 ரன்கள் வித்தியாசத்தில் மும்பையை வீழ்த்தியது ஐதராபாத்



ஐ.பி.எல் தொடரின் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதியது. இதில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்துவீசுவதாக அறிவித்தது. அதன்படி களமிறங்கிய ஐதராபாத் அணி மும்பை அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் பறக்கவிட்டனர்.

ஹெட், அபிஷேக் சர்மா, கிளாசென் ஆகியோரின் அரைசதத்தால் இறுதியில் ஐதராபாத் அணி 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 277 ரன்கள் குவித்தது. ஐதராபாத் தரப்பில் கிளாசென் 80 ரன், அபிஷேக் சர்மா 63 ரன், ஹெட் 62 ரன் எடுத்தனர்.

இதையடுத்து 278 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் மும்பை அணி ஆடியது. தொடக்க ஆட்டக்காரர்களாக ரோகித் இஷான் கிஷன் களமிறங்கினர். இருவரும் தொடக்கம் முதலே அதிரடி காட்டினர். இதனால் 3 ஓவரில் மும்பை 50 ரன்களை கடந்தது.

அதிரடியாக விளையாடி இஷான் 34 ரன்னிலும் ரோகித் 26 ரன்னிலும் அவுட் ஆகினர். இதனையடுத்து நமன் மற்றும் திலக் வர்மா ஜோடி சேர்ந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினர். 14 பந்தில் 30 ரன்கள் குவித்த நமன் அவுட் ஆனார். அதிரடியாக விளையாடிய திலக் வர்மா 64 ரன்கள் எடுத்து வெளியேறினார்.

மந்தமாக விளையாடிய ஹார்திக் பாண்ட்யா 20 பந்துகளில் 24 ரன்களில் வெளியேறினார். இறுதி கட்டத்தில் ரொமாரியோ ஷெப்பர்ட் டிம் டேவிட் முடிந்த அளவுக்கு வெற்றிக்கு போராடினர். இறுதியில் ஐதராபாத் அணி 40 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## ஐபிஎல் வரலாற்றில் அதிக ரன்களை குவித்த சன்ரைசர்ஸ் மும்பைக்கு 278 ரன்கள் இலக்கு




ஐபிஎல் தொடரின் 8வது லீக் போட்டியில் ஐதராபாத் மற்றும் மும்பை அணிகள் மோதுகிறது. இந்த போட்டியில் ஐதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி மைதானத்தில் நடைபெறுகிறது. இதில் டாஸ் வென்ற மும்பை ஐதராபாத் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி தொடக்க ஆட்டக்காரர்களாக மயங்க் அகர்வால் திராவிஷ் ஹேட் ஆகியோர் களமிறங்கினர். மயங்க் அகர்வால் 11 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அபிஷேக்திராவிஷ்ஹேட்உடன்ஜோடிசேர்ந்துஅதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

இதனால் பவர்பிளேயில் சன்ரைசர்ஸ் அணி 1 விக்கெட் இழப்பிற்கு 81 ரன்கள் குவித்தது. அதிரடியாக விளையாடிய திராவிஷ் ஹெட் 18 பந்தில் அரை சதம் விளாசினார். அவர் 24 பந்தில் 62 ரன்கள் குவித்து ஆட்டமிழந்தார். மறுபுறம் ருத்ர தாண்டவம் ஆடிய அபிஷேக் 16 பந்தில் அரை சதம் விளாசினார். அவர் 23 பந்தில் 63 ரன்கள் குவித்து அவுட் ஆனார்.

இதனை தொடர்ந்து வந்த கிளாசனும் அதிரடியாக விளையாடி அணியின் ஸ்கோரை உயர்த்தினார். அவர் 23 பந்தில் அரை சதம் விளாசினார்.

இறுதியில் சன்ரைசர்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட்டுகளைஇழந்து277ரன்கள்குவித்தது. இதன்மூலம் ஐபிஎல் வரலாற்றில் அணியாக அதிக ரன்கள் குவித்த அணி என்ற சாதனையை சன்ரைசர்ஸ் அணி படைத்துள்ளது. இதற்கு முன்பு புனே வாரியர்ஸ் அணிக்கு எதிராக ஆர்சிபி 263 ரன்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. அந்த சாதனையை சன்ரைசர்ஸ் முறியடித்துள்ளது.



**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

**விளக்கம்:**

**எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.**

**நமது தினகனி**
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
**94436 99066**

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.